
# கென்யா



# தேவனுக்காக வாழ்தல்

*"நான் காதுகேளாதவளாக இருந்தாலும், நான் இயேசுவின் குரலைக் கேட்டிருக்கிறேன்"*

இந்தச் சம்பவம், முந்தைய ஒரு பதின்மூன்றாம் ஓய்வுநாள் காணிக்கையின் மூலம் கிடைத்த பலனைப்பற்றிய ஒரு தற்போதைய தகவலாகும்.

மேரி கென்யாவில் காது கேளாதவராகப் பிறந்தார். அவர் மிகவும் சிறுபிள்ளையாக இருந்தபோதே அவரது பெற்றோர் இறந்துவிட்டனர்; அன்பான அவரது சிறிய தந்தைதான் அவரை வளர்த்து வந்தார்.

மேரி கல்வி கற்கவேண்டும் என்று அவரது சிறிய தந்தை விரும்பினார். ஆனால் மேரி அரசுப் பள்ளிக்குச் சென்றபோது, ஆசிரியர்கள் பேசுவதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அங்கு என்ன நடக்கிறது என்பதே அவருக்குத் தெரியவில்லை.

அவரது சிறிய தந்தை காது கேளாத குழந்தைகளுக்கான ஒரு பள்ளியை பலகாலம் தேடினார். பல பள்ளிகள் இருந்தன, ஆனால் அவை அனைத்திலும் அதிகக் கட்டணம் வசூலித்தார்கள். அவர் ஒரு மக்காச்சோள விவசாயி என்பதால், அவ்வளவு கட்டணத்தைச் செலுத்துவதற்கு அவரிடம் வசதி இல்லை. மேரிக்கும் குடும்பத்திற்கும் உணவு தேவைகளைச் சந்திப்பதே அவருக்குப் பெரும் சிரமமாக இருந்தது.

மேரிக்கு ஏழு வயதாக இருந்தபோது, அவரது சிறிய தந்தை அவரை ஒரு முகாம் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு போதகர் மேரியைப் பார்த்துவிட்டு, அவரை செவந்த்-டே அட்வென்டிஸ்ட் காது கேளாதோர் உறைவிடப் பள்ளிக்கு அனுப்புமாறு அறிவுறுத்தினார்.

சிறிய தந்தைக்கு அந்த யோசனை மிகவும் பிடித்திருந்தது, ஆனால்

அது ஒரு கனவுபோலவே தோன்றியது. மவாடா காதுகேளாதோர் அட்வென்டிஸ்ட் பள்ளியிலிருந்து அவர்கள் வெகு தொலைவில் வசித்தனர்; மேலும் பேருந்து கட்டணம் மற்றும் கல்விக்கட்டணத்திற்கு அவர்களிடம் பணம் இல்லை. இருப்பினும், அந்தச் சிறுமி கல்வி கற்க வேண்டும் என்று அவர் உறுதியாக விரும்பினார். எனவே, பள்ளிக்குச் செல்வதற்கான பேருந்து டிக்கெட்டுகளை வாங்குவதற்காக அவர் தனது தோட்டத்தில் விளைந்த மக்காச்சோளத்தை விற்றுப் பணம் சேர்த்தார்.

பள்ளியில், தலைமை ஆசிரியர் மேரியை அன்புடன் வரவேற்றார், மேலும் கல்விக்கட்டணம் மற்றும் பிற செலவுகளைப்பற்றி கவலைப்பட வேண்டாம் என்று அவளது சிறிய தந்தையிடம் கூறினார். மேரி தங்குவதற்கான விடுதியையும் அவர் காண்பித்தார்.

மேரி தனது சிறிய தந்தையிடம் விடைபெற்று, விரைவிலேயே புதிய வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். தன்னைப்போல காது கேளாத நண்பர்கள் கிடைத்தபோது அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஒவ்வொரு நாளும் வயிற்றுக்கு சாப்பாடும் கிடைத்தது. குறிப்பாக, தேவனைப்பற்றி அறிந்துகொள்வது அவருக்குப் பிடித்திருந்தது. ஒவ்வொரு காலையிலும், வகுப்புகள் தொடங்கும்முன் ஆசிரியர் ஒரு வேதாகம வசனத்தை வாசிப்பார். மேரிக்கு யோவான் 3:16 மிகவும் பிடித்திருந்தது: 'தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'.

அவர் வாசிக்கக் கற்றுக்கொண்டதும், தினமும் வேதாகம வசனத்தை வாசிப்பதற்கு தனக்கு வாய்ப்பை வழங்குமாறு வேண்டினார்.

"ஆசிரியரே, இன்று நான் இந்த வசனத்தை வாசிக்கட்டுமா?" என்று அவர் கேட்பார். அந்த வசனத்தை வாசிப்பார்.

ஒன்று, இரண்டு என மூன்று ஆண்டுகள் கடந்தன. தேவன் தனக்கு உண்மையுள்ளவராக இருப்பதைக் கண்டார். தனது பழைய வாழ்க்கையை எண்ணிப் பார்த்தபோது, தேவன் தனக்குக் கல்வியையும் ஒரு சிறந்த எதிர்காலத்தையும் வழங்கியிருப்பதைப் புரிந்துகொண்டார். அவர் தனது இதயத்தை இயேசுவுக்கு அர்ப்பணிக்கவும், ஞானஸ்நானம் பெறவும் முடிவு செய்தார்

"நான் தேவனுக்காக வாழப் போகிறேன்" என்று அவர் பள்ளித் தலைமை ஆசிரியரிடம் கூறினார்.

இன்று, மேரிக்கு 13 வயது. அவர் இந்தப் பள்ளியில் ஆறு ஆண்டுகளாகப் படித்து வருகிறார், மேலும் அவர் தேவனுக்காகவே வாழ்ந்து வருகிறார். இப்போது, அவர் தினமும் வேதாகம வசனத்தை வாசிப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை; அவர் பிரசங்கங்களைத் தயாரித்து, பள்ளியின் ஆலயத்திலோ அல்லது ஓய்வுநாட்களில் பிற ஆலயங்களிலோ பிரசங்கிக்கிறார். ஒரு நாள் திரும்ப வந்து, தம்மை நேசிக்கும் அனைவருக்கும் காதுகேட்கிற

திறனை வழங்கப்போகும் இயேசு வைப்பற்றிப் பிரசங்கிப்பதை அவர் மிகவும் விரும்புகிறார்.

“நான் காது கேளாதவளாக இருந்தாலும், நான் இயேசுவின் குரலைக் கேட்டிருக்கிறேன்” என்று அவர் கூறினார்.

2023-ஆம் ஆண்டு வழங்கப் பட்ட காணிக்கையின் ஒரு பகுதி, கென்யாவில் உள்ள மவாடா காது கேளாதோர் பள்ளியை விரிவுபடுத் துவதற்கு உதவியது. இதன் மூலம் சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கான புதிய விடுதி, நவீன சமையலறை, உணவுக்கூடத்துடன் கூடிய பல் நோக்கு அரங்கு ஆகியவைக் கட் டப்பட்டன.

இதற்கு முன்பு, பிள்ளைகள் திறந்தவெளியில் அமர்ந்து உணவு உண்டு வந்தனர்; இரும்புத் தகடுக ளால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட சமையலறையில், விறகு அடுப்பில் சமைக்கப்பட்டு வந்தது. இந்தப் பள்ளிக் குழந்தைகளுக்கு இயேசு வின் அன்பைப் பகிர்ந்து கொள்ள உதவிய உங்கள் தாராள குணத் திற்கு நன்றி.

இந்தக் காலாண்டின் மிஷன் திட்டங்களில் மற்றொன்று கென்யா வில் உள்ள மெரிஷோ அட்வென் டிஸ்ட் கம்யூனிடி மழலையர் பள் ளிக்கு உதவுவது ஆகும். அங்கும் பிள்ளைகளுக்கு தேவனைப்பற்றிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் ஆப்பிரிக்கக் கண்டத்தையும், அதில் கென்யா நாடு இருக்கும் இடத் தையும் காட்டுங்கள். பிறகு கிசி நகரத்தைக் காட்டுங்கள். இங்குதான் 2023–ஆம் ஆண்டு காணிக்கையின் ஒரு பகுதியைப் பெற்ற மவாடா காதுகேளாதோர் அட்வென் டிஸ்ட் பள்ளி அமைந்துள்ளது. இந்தப் பள்ளி கென்யாவின் தலைநகரான நைரோபியி லிருந்து மேற்கே சுமார் 185 மைல் (300 கிமீ) தொலைவில் உள்ளது என்பதை விளக் குங்கள்.
- அந்தச் சிறுமி மற்றும் அவரது குடும்பத்தினரின் தனியுரிமையைப் பாதுகாப்பதற்காக, ‘மேரி’ என்பது ஒரு புனைபெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
- அந்தப் பள்ளியின் முதல்வரான ஒபியரோ தனக்குப் பிடித்த ஒரு பாடலைப் பாடுகிற ஒரு சிறிய காணொளியைப் பார்க்கவும்: ***bit.ly/Mary-ECD.***
- இந்தக் கதைக்கான புகைப்படங்களை முகநூல் பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய வும்: ***bit.ly/fb-mq.***
- கென்யாவின் தேசிய விலங்கு சிங்கம் ஆகும்.
- வனசவாரிக்கு மிகவும் பிரபலமான நாடுகளில் கென்யாவும் ஒன்று. சிறுத்தைகள், யானைகள், ஒட்டகச்சிவிங்கிகள், நீர்யானைகள், சிங்கங்கள், காண்டாமிருகங்கள், வரிக்குதிரைகள் மற்றும் பல விலங்குகளைக் காண்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான மக்கள் கென்யாவின் சவன்னா புல்வெளிகளுக்கு வருகின்றனர்.
- காட்டு விலங்குகளை வேட்டையாடுவதிலிருந்து பாதுகாக்க, கென்ய அரசாங்கம் 50–க்கும் மேற்பட்ட சரணாலயங்களையும் பூங்காக்களையும் அமைத்துள்ளது.